DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 50/2021
Prosecution side witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.காளிச்சாமி** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.02.2026**

Accused absent, U/s. 317 of Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் பசுவந்தனை தெற்கு பொம்மையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரி பாலமுருகனை எனக்கு தெரியும். அவர் தற்போது இறந்து விட்டார். எதிரியின் தகப்பனார் காளிபாண்டியை எனக்கு தெரியும். நான் வழக்கமாக பிள்ளையார் கோவிலில் படுத்து உறங்குவது வழக்கம். அதேபோல் கடந்த 17.05.2020 இரவு சுமார் 9.00 மணிக்கு மேல் நடுத்தெருவில் உள்ள பிள்ளையார் கோவிலில் நான் படுத்திருந்த போது எங்கள் ஊர் கீழத்தெருவைச் சேர்ந்த காளிபாண்டி மகன் பாலமுருகன் வந்து ஏலே தேவடியாக மகனே இங்கு ஏன் படுத்து தூங்குகிறாய் என கேட்டார். நான் தினமும் இங்கு தான் தூங்குகிறேன். இன்று வந்து ஏன் இவ்வாறு தகராறு செய்கிறாய் என்று கேட்டேன். நீ இங்கு தூங்க கூடாது என்று சொன்னார். நான் அப்படி தான் தூங்குவேன் உனக்கு என்னல என்று சொன்னேன். அதற்கு அவர் சொன்னால் கேட்க மாட்டாயா என

சொல்லி சாரத்தில் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து செத்துபோ என சொல்லி பின்னந்தலையில் வெட்டினார். நான் தடுத்த போது மீண்டும் வலது கண்ணத்தில் வெட்டி விட்டார். மீண்டும் வெட்ட வந்த போது நான் தடுத்தேன். வலது மணிக்கட்டில் வெட்டுகாயம் ஏற்பட்டது. நான் அய்யோ அம்மா வெட்டுகிறான் என சத்தம் போட்டேன். பக்கத்தில் இருந்த முருகன் என்பவர் வந்து ஏன் இப்படி தகராறு செய்கிறாய் என சத்தம் போட்டார். உடனே அவன் அரிவாளுடன் வீட்டை பார்த்து ஓடி விட்டான். நான் உடனே வீட்டிற்கு சென்று எனது தம்பி மகராஜனிடம் பாலமுருகன் வெட்டியதை சொன்னேன். எனது தம்பி அவரது பைக்கிள் உட்கார வைத்து பசுவந்தனை அரசு ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு வீட்டிற்கு சென்றார். அங்கிருந்தவர் என்னை துாத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள். என் தம்பி மகராஜன் ஊருக்கு சென்று விட்டார். பின்னர் என்னை வெட்டிய விபரத்தை என் தம்பி மகராஜன் மேற்படி காளிபாண்டியிடம் வீட்டில் சென்று பாலமுருகனிடம் ஏன் என் அண்ணனை வெட்டினாய் என்று கேட்டுள்ளார். பின்னாலேயே என் தம்பி மனைவியும், மனைவியின் அம்மாவும் வந்துள்ளார்கள். அப்போது அங்கு வைத்து காளிபாண்டி வீட்டிற்கு வந்து எப்படி கேட்பாய் அவனை வெட்டி கொல் என துாண்டி விட்டுள்ளார். பாலமுருகன் அரிவாளால் என் அப்பா கருப்பசாமியையும், என் தம்பி மகராஜாவையும் வெட்டி கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை :– <u>(எதிரிகள்தரப்பில்)</u>

நான் சொன்ன நாள் நேரத்தில், சொன்ன விதத்தில் 1வது எதிரி பாலமுருகனும்,2 வது எதிரி காளிபாண்டியும் எனது அப்பாவையும்,

தம்பியையும் வெட்டிக் கொல்லுமாறு சொன்னதன் பேரில் பாலமுருகன் வெட்டி கொலை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1 வது எதிரி பாலமுருகனை நானும் மற்றும் சிலரும் சேர்ந்து வெட்டிக் கொலை செய்து விட்டதாக கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் என் மீது கொலை வழக்கு உள்ளது என்றால் சரிதான். நான் மதுஅருந்திவிட்டு கீழே விழுந்ததால் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், 1ம் எதிரி பாலமுருகன் வெட்டி எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.02.06 15:48:17 +0530

II Additional District& Sessions Judge,
Thoothukudi.